RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணன் படைப்புலகில் ஒரு சகாப்தம்

**து. ஸ்ரீபாரத்ப்ரியா [அ, *], மோ. ரூபா [அ]**

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை - 600032, தமிழ்நாடு, இந்தியா

# Rajam Krishnan is an Era in the World of Creative Writing

**D. Sribharath Priya [a, *], M. Roopa [a]**

[a] PG Tamil & Research Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamilnadu, India

* Corresponding Author:
bharathinaban@gmail.com

Received: 05-12-2025
Revised: 24-02-2026
Accepted: 12-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan is one of the female writers who have carved a unique place for themselves in the world of Tamil literature. A remarkable female personality.There is a belief that writers live on through their writings, transcending time, even after their death. But this person, not only through his writings but also through his physical presence, continues to serve this society forever. There is a belief that writers live on through their writings, transcending time, even after their death. But this person, not only through his writings but also through his physical presence, continues to serve this society forever.Rajam Krishnan was a person who not only expressed her vision for society and traditional values in her writings but also lived them out in her own life.This study examines how his creations and thoughts remain unique, which is why she continues to be a legendary writer in the world of creative arts forever.

**Keywords:** Personality, Individuality, Feminism, Society, Field Research.

## முன்னுரை

தமிழகத்தின் நெல்லை மாவட்டத்தை பூர்விகமாகக் கொண்டிருந்த போதிலும் இவர் பிறந்தது முசிறி எனும் சிற்றூரில். 1925 இல் பிறந்த இராஜம் கிருஷ்ணனுக்கு உயர்கல்வி கிடைக்கப்பெறவில்லை. அந்தக் காலத்தின் வழக்கப்படி சிறுவயதிலேயே திருமணம் என்ற பந்தத்தில் நுழைந்த இராஜம் கிருஷ்ணனுக்கு ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்தார். கூட்டு குடும்பத்தில் ஓய்ந்து ஒடுங்கி விடவில்லை. தன் விருப்பங்களை எப்படி நிறைவேற்றிக் கொள்வது என்ற தெளிவு இருக்கு இருந்தது. கூட்டு குடும்பத்தின் அடுக்களை வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு அங்கேயே அமர்ந்து கிடைத்த காகிதத்தில் எல்லாம் எழுதி இருப்பதாக அவரே ஒரு முறை கூறியிருக்கிறார்.

## இலக்கிய ஆளுமை

நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த கூட்டுக்குடும்பத்தில் வாழ்ந்த என் கணவரின் பணிக்காக பல்வேறு ஊர்களுக்கும் சென்று அங்குள்ள சூழலை ஏற்றுக்கொண்டு வாழவேண்டிய கட்டாயத்தில் இருந்த பெண். ஒரு குடும்பத்தின் அத்தனை பண்பாட்டு நெருக்கடிகளையும் ஏற்று வாழ்ந்தார். அதே நேரத்தில் தன் அடையாளத்தை விருப்பத்தை விட்டுக் கொடுக்காமல் தடம் பதித்த படைப்பாளியாகவும் மிளிர்ந்தார் என்பதில் தான் இராஜம் கிருஷ்ணன் எனும் ஆளுமை உயர்ந்து நிற்கிறது.

“கண்டதைப் படித்தவன் பண்டிதன் ஆவான்” என்ற வசனம் இவரது வாழ்வில் உண்மையாயிற்று. தேடித்தேடிப் புத்தகங்களை படிக்கும் பழக்கம் இவருக்கு சிறுவயதிலேயே இருந்தது. திருமணம் ஆகி விட்டபோதிலும் தன் முயற்சியினால் மொழி அறிவை பெற்றார். ஆங்கிலம் மட்டுமல்லாது ரஷ்ய மொழியும் இவருக்கு தெரிந்திருந்தது.

## ராஜம் கிருஷ்ணனின் படைப்பிலக்கிய ஆற்றல்

ராஜம் கிருஷ்ணன் எழுதுவதற்கு வந்த காலத்தில் பெண் எழுத்தாளர்கள் பெரும்பாலும் குடும்ப கதைகளை எழுதும் தன்மை பெற்றவர்களாக இருந்தார்கள். ஆனால் அதை உடைத்து எறிந்து சமூக அரசியல் பார்வைகளையும், இராஜம் கிருஷ்ணன் தன் எழுத்துகளில் கொண்டு வந்தார். பெண்களுக்கு எவ்வாறு பாரம்பரியமானதும், இடையறாததும், உயர் துடிப்பானதுமான தொடர்பு இருகின்றதோ அவ்வாறே படைப்பிலக்கிய முயற்சிகளுடனான அவர்களின் தொடர்பும் மிக நீண்டதாகும். பெண்கல்வி மறுப்பு முதலான பல்வேறு தடைகள் சவால்களுக்கு மத்தியிலும் பெண் சிந்தித்து இருக்கின்றார். தான் சிந்தித்ததை எழுத்தை ஊடகமாக கொண்டு பதிவு செய்தும் இருக்கிறாள். இந்த வகையில் தனது எழுத்துக்களால் பொதுவாக பலதரப்பட்ட வாசகர்களையும் குறிப்பாக பெண்களையும் சிந்திக்க வைத்த இராஜம் கிருஷ்ணனின் படைப்பாற்றல் மிகவும் அற்புதமானது.

## ராஜம் கிருஷ்ணன் அவர்கள் சிறந்த பெண்ணாளுமை

ராஜம் கிருஷ்ணன் அவர்கள் கதைக்களத்திற்கு நேரடியாக சென்று குறித்த சமூகத்தினரோடு ஊடோடி அவர்கள் பிரச்சனைகளைப் பற்றி புரிந்து கொண்டு தமது நாவல்களை எழுதியவர். அக்காரணத்தால் அவற்றில் குறித்த சமூகங்களில் பல்வேறுபட்ட பிரச்சனைகள், அவர்களின் வட்டார மொழியிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் சிவகாசி பிரதேசத்தில் உள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழந்தை தொழிலாளர்களின் அவலங்களை நெஞ்சை உருக்கும் வகையில் சொல்லும் “கூட்டுக் குஞ்சுகள்” தஞ்சை மாவட்ட விவசாயிகளின் வாழ்வியல் போராட்டங்களைப் பதிவு செய்யும் “சேற்றில் மனிதர்கள்” நீலகிரி மலைப்பிரதேசப் பழங்குடிகளான படுகர்களின் வாழ்வாதாரமாக இருந்த விவசாய பயிர் செய்கை காலமாற்றத்தினால் பணப்பயிரான தேயிலைத் தோட்டப் பயிர் செய்கையாக மாறியதால் அவர்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் சவால்களை விளக்கும் “குறிஞ்சித்தேன்” கோவா பிரதேச பின்புலத்தில் அமைந்தது. “கரிப்பு மணிகள்” தூத்துக்குடி பிரதேச உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டது. மார்க்சியப் பார்வைக் கொண்டிருந்த ராஜம் கிருஷ்ணனைப் போல் உழைக்கும் வர்க்கத்தினர் வாழ்வியல் நிலைமையை மெய்யான கரிசனத்தோடு பதிவு செய்திருக்கும் எழுத்தாளர்களின் எண்ணிக்கை குறைவானதே அதுபோலவே அரசியல் போராட்டங்களில் பெண்களின் பங்களிப்பை வலியுறுத்தும் நாவல்களை அதிகமாக எழுதியவரும் அவர் ஒருவர் தான்.

## எக்காலத்திலும் வீழாதவர்

தமிழ் இலக்கிய உலகில் ராஜம் கிருஷ்ணன் அவர்கள் பெயர் தவிர்க்க இயலாது. நாவல் என்பது நான்கு சுவற்றுக்குள் தனிமையில் கற்பனை குதிரைகளை ஓடவிட்டு கதைகளை எழுதிக் கொண்டிருந்த காலகட்டத்தில் எழுத்துலகில் புதுமை பெண்ணாகவும் சக்கரவர்த்தியாகவும் தோன்றியவர் தான் ராஜம் கிருஷ்ணன் அவர்கள். 1990 மார்ச் எட்டு மகளிர் தினம் அன்று காலை தினமலர் பத்திரிக்கையின் முதல் பக்கத்தில் ஒரு பெரிய கருப்பு வெள்ளை புகைப்படத்தை வெளியிட்டு இருந்தது. வயது முதிர்ந்த ஒரு பெண் சாராயக்கடைக்கு சென்று சரக்கு வாங்கிக் கொண்டிருப்பதற்கான படம் அது .அந்த வயதான பெண்ணும் ஒரு கூலித் தொழிலாளியாக தான் அந்தப் புகைப்படத்தில் தெரிந்தார். அதற்கு தலைப்பு இதுதான் மகளிர் தினம் அதை பார்த்துவிட்டு காலையிலே தொலைபேசியில் அழைத்து கடுமையாக பேசினார். பத்திரிகை அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என்று கொந்தளித்தார். அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் தோழர்கள் தினமலர் பத்திரிக்கையை தீயிட்டுக் கொளுத்தினர். ராஜம் கிருஷ்ணன் அதில் கலந்துகொண்டு கடுமையாக பேசினார். கடினமான உடல் உழைப்பைச் செலுத்தக்கூடிய பெண்ணாகவும் அவர் இருக்கலாம். உடல் வலிக்காகவும் வாங்கி சென்று இருக்கலாம். இந்த ஒரு நிகழ்ச்சியையும் படத்தையும் மட்டுமே வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த பெண்களையும் எடை போடுவதா? இழிவு படுத்துவதா? மகளிர் தினம் என்பது எவ்வளவு உயர்வானது என்பது உங்களுக்கு தெரியுமா? உங்கள் பார்வையில் இதுதான் மகளிர் தினமாக இருக்கலாம். ஆனால் எங்களுக்கு என கோபத்தால் பொரிந்து தள்ளி விட்டார்.

## முடிவுரை

பல்வேறு பகுதிக்கும் நேரடியாக பயணித்து அந்தப் பகுதியில் வாழும் மக்களுடன் பழகி பின் தகவல்களை திரட்டி தன் கற்பனையை கலந்து படைப்புகளை உருவாக்கியுள்ளார். அதிலும் குறிப்பாக பெண்களை உழைப்பாளிகளாகவும் அசல் போராளியாகவும் உயிருடன் நம்மிடையே உலவ விட்டவர். அந்த பாத்திரங்கள் அனைவரும் வாசகர்களின் மனங்களில் இன்றைக்கும் நிலைபெற்று வாழ்கிறார்கள். குழந்தைகள் உழைப்பு சுரண்டப்படுவது குறித்தும் அவர்களின் அடிப்படை உரிமைகள் குறித்தும் ராஜம் கிருஷ்ணனின் எழுதுகோல் மகத்தான பணியை மேற்கொண்டுள்ளது. அதனால் தான் அவர்கள்

இன்றளவும் அனைவரின் மத்தியிலும் நீங்கா இடம் பிடித்து ஒரு இலக்கிய உலகின் சிறந்த படைப்பாளியாகவும் மிகப்பெரிய சகாப்தமாகவும் விளங்குகிறார்.

## References

ராஜம் கிருஷ்ணன் (2013) ராஜம் கிருஷ்ணன் அவர்களின் பெண்ணிய சிந்தனைகள்.

க. கைலாசபதி (1968) தமிழ் நாவல் இலக்கியம்.

ராஜம் கிருஷ்ணன் (2013) கரிப்பு மணிகள்.

ராஜம் கிருஷ்ணன் (1990) அலைவாய் கரையிலே.

ராஜம் கிருஷ்ணன் (2016) வேருக்கு நீர்.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License